**செய்தி வெளியீடு எண்: 892** **நாள்: 02.07.2024**

**செய்தி வெளியீடு**

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், ஆழியாறு அணையிலிருந்து எலவக்கரை குளத்தை நிரப்புவதால், அதன் ஆயக்கட்டுப் பகுதியில் நிலையில் உள்ள பயிர்களை காப்பாற்றுவதற்கும் மற்றும் பாலாற்றில் தண்ணீர் கொண்டு செல்வதால், பாலாற்றின் இருபுறமும் உள்ள ஜல்லிபட்டி, துறையூர், கம்பாலபட்டி மற்றும் கரியாஞ்செட்டிபாளையம் ஆகிய கிராமங்களில் உள்ள கிணறுகளின் நீர்மட்டம் உயருவதால் அவற்றின் குடிநீர் தேவைகள் மறைமுகமாக பூர்த்தி செய்வதற்கும், ஆழியாறு அணையிலிருந்து 03.07.2024 முதல் 09.07.2024 முடிய 6 நாட்களுக்கு வினாடிக்கு 61.00 கன அடி வீதம் மொத்தம் 32.00 மில்லியன் கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**
**(நீர்வளத்துறை)**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu